<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருநெல்வேலி.</u>
<u>வழக்கு எண் : S.C.No.576/2022</u>
<u>வழக்கு சாட்சி PW14</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பத்பநாபபிள்ளை | மாவட்டம் | : | திருநெல்வேலி |
| தந்தை பெயர் | : | கோலப்பாபிள்ளை | வயது | : | 56 |
| ஊர் | : | சேரன்மகாதேவி | வேலை | : | காவல் ஆய்வாளர் |

திருநெல்வேலி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் திருமதி.R. உமா ஆகிய என்னால் உறுதிமொழிகள் சட்டம் 1944 படி சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>நாள் : 20.07.2026</u>

<u>முதல் விசாரணை :</u>

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் தாழையுத்து காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 22.06.2021ம் தேதி பெண் உதவி ஆய்வாளர் திருமதி. சாவித்திரி என்பவர் பதிவு செய்த தாழையுத்து காவல்நிலைய குற்ற எண். 215/2021, பிரிவுகள் 4(a) Explosive Substance Act 1908 r/w 506(2) இதச வழக்கு பதிவு செய்து என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.00 மணிக்கு சம்பவம் இடமான சங்கர் சிமெண்ட் Factory lift பக்கம் சென்று சாட்சிகள் சின்னத்துரை, நயினார் முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் வெடிகுண்டு கண்காணிப்பு குழு மற்றும் செயல் இழப்பு செய்யும் குழுவினருக்கு காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. வெடிக்குண்டு நிபுணர்கள் குழு வந்து மேற்படி கம்பெனியின் Pre Heater Lift Control Room ல் எதிரிகளால் வைக்கப்பட்ட 2 பைப் வெடிகுண்டுகளை அப்புறப்படுத்தி எடுத்து 20.35 மணிக்கு ஆஜர் செய்தார். அதை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் BDDS ஆய்வாளர் திரு.பால்ராஜ் மற்றும் தலைமைக்காவலர் திரு.சுனில்குமார் என்பவர் மூலம் அத்தாட்சியை கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள்

தட்சிணாமூர்த்தி, பெண் உதவி ஆய்வாளர் சாவித்திரி, சின்னத்துரை, நயினார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.06.2021ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட வெடிக்குண்டுகளை செயல் இழக்க செய்ய உத்தரவு வேண்டி 2 பைப் வெடிக்குண்டுகளை புகைப்படத்துடன் கனம் நீதித்துறை நடுவர் எண்.3 க்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

3. பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை 4(a) Explosive Substance Act 1908 r/w 506(2) இதச லிருந்து 4(a) Explosive Substance Act 1908 r/w 389, 506(2) இதசவாக சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கில் தொடர்புள்ள எண்களான 9952206437, 9150425766, 6380851797, 9786721058, 8778152033, 9003575703 என்ற எண்களுக்கு Call History கேட்டு பெற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 23.06.2021ம் தேதி நீதிமன்ற உத்தரவு பெற்று திருநெல்வேலி மாவட்ட வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு பிரிவு நிபுணர் குழு மூலம் செயல் இழக்கம் செய்யப்பட்டது. 23.06.2021ம் தேதி இவ்வழக்கில் வாதியை மிரட்டப்பயன்படுத்தப்பட்ட செல்போன் நம்பர் 7550305123, 9715664030 அழைத்த விவரம் முகவரி கேட்டு சைபர் கிரைம்க்கு விண்ணப்பம் செய்தேன்.

4. அறிக்கை கிடைக்க பெற்றதன் பேரில் 7550305123 உரிமையாளர் ரூரில் அன்சாரி, பேட்டை என்பவரை விசாரித்தபோது தனது உறவினர் பேட்டை ஜெயக்குமார் மகன் சலீம் என்பவர் தனது உறவினர் என்றும் அவரது உடன்பிறந்த சகோதரியை திருமணம் செய்ய நிச்சயதார்த்தம் செய்துள்ளதாகவும் சலீம் சிம்கார்டு கேட்டதால் தனது பெயரில் உள்ள சிம்கார்டை கொடுத்ததாகவும் கூறினார். அதே போல் 9715664030 எண்ணின் உரிமையாளரான ஜெயராமன் என்பவரை விசாரித்த போது சிம் கார்டு என்னுடையது என்றும் தான் பாளையங்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே உள்ள நெல்லை சரவணபவன் ஹோட்டலில் கேசியராக வேலை பார்ப்பதாகவும் 18.06.2021ம் தேதி இரவு வேலை முடித்து பாளை VOC Ground அருகே வந்தபோது ஒருவர் அவசரமாக போன் பேசி தருவதாக கூறி தன்னிடம் இருந்த நோக்கியா பட்டன் செல்போனை வாங்கி பேசியவர் திடீர் என்று செல்போனுடன் ஓடி விட்டதாகவும் பட்டன் போன் தானே என்று

தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும் சிம் கார்டை 20.06.2021ம் தேதி மீண்டும் Proof கொடுத்து வாங்கி தற்சமயம் பயன்படுத்தி வருகிறேன். தற்சமயம் மேற்படி நம்பர் தன்னிடம் உள்ளது என்று கூறினார். 7550305123 நம்பரை அன்சாரி என்பவர் சலீம் என்பரிடம் கொடுத்துள்ளார். சலீம் என்பவர் தனது கூட்டாளியுடன் சேர்ந்து இவ்வழக்கில் ஈடுபட்டிருக்ககூடும் என்பதால் சந்தேகத்தின் பேரில் சலீமை தேடிச்சென்றததில் தலைமறைவாகி விட்டார்.

5. பின்னர் கிடைத்த தகவலின் படி நண்பர்களுடன் தாழையுத்தில் இருப்பது தெரியவந்த நிலையில் 23.06.2021ம் தேதி 13.30 மணியளவில் தாழையுத்து ஸ்ரீநகர் பஸ்ஸ்டாப் அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விவரம் கேட்டு தெரிந்த ஆறுமுகம், சலீம் ஆகிய இருவரும் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் தப்பிக்க முயன்றவர்களை மடக்கி பிடித்து கைது செய்தபோது எதிரி ஆறுமுகம் தனாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆஜர் சாட்சி நாராயணசாமி, ஜெயக்குமார் என்பவர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை 15.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களை பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 23.6.2021ம் தேதி வழக்கில் சேர்க்கப்பட்ட எதிரிகள் ஆறுமுகம், உடையார், சோமசுந்தரம், சலீம், வைரவன் ஆகியோர்கள் குற்ற செயலில் ஈடுபட்டதாக தெரியவந்ததால் மேற்படி எதிரிகளை இவ்வழக்கின் எதிரிகளாக சேர்த்து புலன் விசாரணை செய்த விவரத்தை அறிக்கையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கின் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தலைமறைவு எதிரியை தேடிவந்த நிலையில் 25.06.2021ம் தேதி 13.00 மணிக்கு தாழையூத்து ஊருக்கு தெற்கே உள்ள டாஸ்மார்க்கில் வைத்து வழக்கின் எதிரியான வைரவன் என்பவரை கைது செய்து அவரை விசாரிக்க அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நாராயணசாமி மற்றும் ஜெயக்குமார் என்பவர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒத்திகைக்காக வெடிக்க செய்த AF குவாரி செல்லும் மண் ரோட்டில் உள்ள காட்டு பகுதிக்கு அழைத்து சென்று எதிரி அடையாளம் காட்டி அந்த இடத்தில் கிடந்த பிளாஸ்டிக் பைப் துண்டுகள்–1, தரைசக்கர வெடியின் பின்புற சிறிய ரவுண்ட் அட்டை–1, அணுகுண்டு வெடி–3, சணல் கொஞ்சம் ஆகியவற்றை 15.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. பின்னர் 16.00 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்துக்களை படிவம்–91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் –91 **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வைரவனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி கம்பெனியில் வேலை பார்த்த ஆறுமுகத்துடன் சேர்ந்து 4 பைப் வெடிகுண்டுகளில் 2 பைப் வெடிகுண்டை இந்தியா சிமெண்ட் கம்பெனியில் Pre heater lift Control ரூம்ல் வைத்தும் மீதம் உள்ள 2 பைப் வெடிகுண்டுகளை கம்பெனியின் வேறு இடத்தில் எங்கோ வைத்துள்ளதாகவும் புலனாகியது. பின்னர் சாட்சிகள் நாராயணசாமி, ஜெயக்குமார் என்பவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. 27.06.2021ம் தேதி எதிரிகளை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த தகவலின் படி 14.00 மணிக்கு எதிரி உடையார், சோமசுந்தரம் ஆகியோர்களை அருகன்குளம் ஆற்றுப்பாலம் பக்கம் வைத்து கைது செய்து எதிரி உடையாரை விசாரித்தபோது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கார்த்திகேயன், சரவணன் என்பர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சம்பத்தில் பயன்படுத்திய TN 72 BQ 5072 என்ற எண்கொண்ட TVS Sports என்ற இரு சக்கர வாகனத்தையும் அப்பால் எதிரி ஆறுமுகம் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 72 BM 4195 Bajaj Pulsar வாகனத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.00 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து நிலையம் ஆவணங்களில் பதிவு செய்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். TN 72 BQ 5072 என்ற எண்கொண்ட TVS Sports படிவம்–91 **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 72 BM 4195 Bajaj Pulsar **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தினை படிவம்–91 மூலம் நீதிமன்ற காலுக்கு அனுப்பி வைத்தேன்.

8. பின்பு சாட்சிகள் கார்த்திகேயன், சரவணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.07.2021ம் தேதி எதிரிகள் ஆறுமுகம் மற்றும் வைரவன் என்பவர்களின் வாக்குமூலத்தின் உண்மை தன்மை நிலவரத்தை மேலும் அறிய போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க மனு தாக்கல் செய்தேன். 02.07.2021ம் தேதி நீதிமன்ற உத்தரவின் படி எதிரி ஆறுமுகம் மற்றும் வைரவன் என்பவர்களை ஒரு நாள் போலீஸ் காவலில் எடுத்து 16.00 மணிக்கு பெற்று 18.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து ஆஜர் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் பொன்னுமுத்து, கிராம உதவியாளர் தனுஷ்கோடி என்பவர் முன்னிலையில் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி என்னை அழைத்து சென்றால் மேற்படி கம்பெனியில் Coolar Vent Fan Foundation bottam என்ற இடத்தில் ஒரு வெடிகுண்டு வைத்துள்ளதை அடையாளம் காட்டுகிறேன் என்ற பகுதி மட்டும் **அ.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. பின்னர் எதிரி வைரவரை அதே சாட்சிகள் முன்னிலையில் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 20.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆறுமுகம் அடையாளம் காட்டியதை BDDS குழு உதவியுடன் G1 பை வெடிகுண்டு-1 அதே சாட்சி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி எதிரியுடனும், வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய பாராவில் ஒப்படைத்தேன். 03.07.2021ம் தேதி எதிரிகளை நீதிமன்றத்தில் திருப்பி ஒப்படைத்தேன். G1 பை வெடிகுண்டு-1 யை 03.07.2021ம் தேதி படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 02.07.2021ம் தேதி நீதிமன்ற உத்தவின் படி காவலில் எடுத்து நிலையம் கொண்டுவந்து 18.00 மணிக்கு விசாரித்தபோது சங்கர் சிமெண்ட் கம்பெனியில் நிர்வாகி தட்சிணாமூர்த்தி என்பவரை முன்விரோதம் காரணமாக மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்துடன் மேற்படி தொழிற்சாலையில் உள்ள Cooler Wend Foundation Bottom என்ற இடத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாக கூறிய சம்பவ இடத்தை சாட்சிகள் முன்னிலையில் அடையாளம் காட்டினார்.

10. மேற்படி வெடிகுண்டை பாதுகாப்பில் வைத்து செயல்இழக்கம் செய்ய வேண்டி திருநெல்வேலி மாநகர காவல் ஆணையருக்கு செயல் இழக்க செய்ய கண்காணிப்பு குழுவிற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். 03.07.2021ம் தேதி நீதிமன்ற உத்தரவின் படி அந்த பைப்

வெடிகுண்டு குழுவினரால் செயல் இழக்கம் செய்யப்பட்டது. ஏற்கனவே கைப்பற்றியிருந்த 2 பைப் வெடிகுண்டுகளும் கடந்த 23.06.2021ம் தேதி நீதிமன்ற உத்தரவின் படி அந்த குழுவால் செயல் இழக்கம் செய்யப்பட்டிருந்தது. செயல் இழக்கம் செய்யப்பட்ட ஒரு பைப் வெடிகுண்டு, செயல் இழக்கம் செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் அடங்கிய CD, Sandisk Pendrive ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 03.07.2021ம் தேதி செயல் இழக்கம் செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் அடங்கிய CD, Sandisk Pendrive **அ.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.06.2021ம் தேதி செயல் இழக்கம் செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் அடங்கிய CD, Sandisk Pendrive **அ.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 20.07.2021ம் தேதி சாட்சிகள் ஆய்வாளர் பால்ராஜ், தலைமைக்காவலர் சுனில்குமார், காவலர் அழகு என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.08.2021ம் தேதி எதிரிகள் பைப் வாங்கிய கடையின் உரிமையாளர் மரியவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஒரு பிளாஸ்டிக் பைப், மூன்று இரும்பு பைப் அதற்குரிய மூடிகள் ஆகியவற்றை விற்ற இரும்பு கடை உரிமையாளர் ரவிக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.08.2021ம் தேதி BDDS குழுவினரால் செயல் இழக்கம் செய்யப்பட்ட வெடிக்குண்டுகளில் இருந்து எடுக்கப்பட்ட துகள்களை நீதித்துறை நடுவர் எண்.3 மூலம் பகுப்பாய்வுக்காக சென்னை வட்டார பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பி வைத்தேன். 20.09.2021ம் தேதி காவலர் சுடலைக்கண்ணு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

12. 22.09.2021ம் தேதி தலைமறைவு எதிரி இசக்கி துரை என்பவர் முன்பிணை உத்தரவு பெற்றதை தெரிந்து கொண்டேன். 20.10.2021ம் தேதி அந்த எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.10.2021ம் தேதி சாட்சி ஜெயராமன், நூருல் அன்சாரி ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.12.2021 ம் தேதி பகுப்பாய்வு அலுவலர் திருமதி.கமலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். அந்த பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.01.2022ம் தேதி 9715664030 என்ற Vodafone நிறுவனத்தின் சிம்கார்டை பொறுத்து அதன் அசல் உரிமையாளர், கால் விவரம், டவர் லொக்கேசன், முகவரி விவரம்

கேட்டு அதன் உரிய அலுவலருக்கு 65 பி சான்றிதழ் வேண்டி தபால் வைத்தேன். அதன் பிரகாரம் Vodafone Nodel அதிகாரி எனக்கு விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் 65 பி சான்றிதழையும் கொடுத்ததை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அந்த அறிக்கை **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7550305123 என்ற Airtel நிறுவனத்தின் சிம்கார்டை பொறுத்து அதன் அசல் உரிமையாளர், கால் விவரம், டவர் லொக்கேசன், முகவரி விவரம் கேட்டு அதன் உரிய அலுவலருக்கு 65 பி சான்றிதழ் வேண்டி தபால் வைத்தேன். அதன் பிரகாரம் Airtel Nodel அதிகாரி எனக்கு விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் 65 பி சான்றிதழையும் கொடுத்ததை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அந்த அறிக்கை **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. 22.02.2022 ம் தேதி Airtel நிறுவனத்தின் Nodel Officer ஜெயக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.03.2022 ம் தேதி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டி மாவட்ட ஆட்சியர் அலுவலரிடம் அனுமதி பெற வேண்டி திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலர் மூலமாக அனுப்பி வைத்தேன். 05.05.2022 ம் தேதி சாட்சி துணை வட்டாட்சியர் சுப்பிரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் R.No.D4/11405/2022, Date:12.04.2022 செயல்முறை ஆணை பெற்றேன். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கின் சட்டடப்பரிவினை 4(a), 4(b)(i) and 3(a) of Explosive Substance Act 1908 r/w 120B, 389, 506(2) இதச r/w 34 IPC என்று சட்டபிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(மேற்படி முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

UMA Digitally signed by UMA Date: 2026.07.20 02:00:13 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருநெல்வேலி.